செய்தி வெளியீடு: 12 நாள்:10.04.2020

பெரம்பலூர் மாவட்டம்

**54 வெளிமாநில தொழிலாளர்களுக்கு ரூ.84 ஆயிரம் மதிப்பிலான உணவுப்பொருட்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராஸேந்திரன் அவர்கள் வழங்கினார்.**

அதன் விபரம் பின் வருமாறு:

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. மக்களின் நடமாட்டத்தை குறைத்து, நோய் தொற்று பரவுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துவரும் அதே வேளையில், பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம், அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்கவும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், கொரோனா வைரஸ் நோய் தொற்றைத் தடுக்க பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவினால் தினக் கூலிகள், விவசாயக் கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், டாக்ஸி ஓட்டுநர்கள், கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், முதியோர்கள் உள்ளிட்ட பொது மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலையில் அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் தொழில் நிமித்தமாக வெளிமாநிங்களிலிருந்து வருகைப்புரிந்து தமிழகத்தில் பணிபுரியும் நபர்களுக்கும் உணவுப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்கள் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் வெளி மாநிலங்களிலிருந்து வந்து தங்கி டைல்ஸ் ஒட்டுதல், கட்டிட வேலை உள்ளிட்ட பல்வேறு தொழில்களை தினக்கூலி அடிப்படையில் புணிபுரிந்து, பெரம்பலூரில் தங்கியுள்ள சுமார் 84 நபர்களுக்கு ரூ.54 ஆயிரம் மதிப்புள்ள கோதுமை மாவு, அரிசி, காய்கறிகள், பருப்புவகைகள் மற்றும் எண்ணெய் உள்ளிட்ட உணவுப்பொருட்களை மேற்காணும் வெளிமாநில பயனாளிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார். இப்பொருட்களை பெற்றுக்கொண்ட வெளிமாநில தொழிலாளர்கள் அனைவரும் தமிழக அரசிற்கு தங்களது நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் வருவாய் வட்டாட்சியர் திரு.பாரதிவளவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**